திருப்புடைமருதூர் அரிசனக் குடியிருப்பு.

*380 வி.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்குக் காலனி வசதியும், ரோடு வசதியும் செய்து கொடுப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம், எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) வீட்டு மனைக்காக நிலங்கள் ஆர்சிதம் செய்யப்பட்டு அரிசனங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளன. ரோடு வசதிக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இதற்கான செயல் திட்டம் எப்போது ஏற்பட்டது? இந்நாள் வரை கால தாமதம் ஏற்படக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: செயல் திட்டம் எப்போது ஏற்பட்டது என்கிற குறிப்பு இல்லை. கால தாமதம் ஏற்பட்டதற்கான காரணமும் இல்லை.

திரு. எஸ். வடிவேல்: அரிசனங்கள் குடியிருக்கிற இடத்தில் இருந்து இடுகாட்டிற்குப் போகக் கூடிய பாதை இல்லாமல் இருக்கிறது. வயல் வழியே போகிறபோது பயிர் நாசமாகிறது என்கிற கலவரம் ஏற்பட்டிருக்கிறது. உடனடியாகப் பாதை அமைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: கேள்வியே அதுதான் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

*House-sites for Harijans at Ediarpakkam.*

*381 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in Ediarpakkam village, Sriperumbudur taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பிரிவு 6-ன் கீழ் விளம்பல் வரைவு அரசின் வாலாய எண் 1792 ச.ந., நாள் 1972-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ல் ஏற்கப்பட்டுள்ளது. விரைவில் அவார்டு பாசானதும் பட்டாக்கள் வழங்கப்படும்.